# தாவரங்கள்

அலகு 3



## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றபின் மாணவர்கள் பெறும் திறன்கள்

- இலைகளின் பாகங்களையும் அவற்றின் பணிகளையும் பட்டியலிடுதல்
- ஒளிச்சேர்க்கையின் செயல்முறையை விளக்குதல்
- தாவரங்கள் முதல்நிலை உற்பத்தியாளர்கள் என்பதனை விவரித்தல்
- மலரின் பாகங்களை விவரித்தல்
- பச்சையமுள்ள மற்றும் பச்சையமற்ற தாவரங்களைப் பற்றி அறிதல்
- அழகுத் தாவரங்களையும் அவற்றின் பங்கினையும் பட்டியலிடுதல்
- தாவரங்களின் உண்ணக்கூடிய பல்வேறு பகுதிகளை அடையாளம் காணுதல்

X7Y5B6

## அறிமுகம்

அனைத்து உயிரினங்களும் உணவை உட்கொள்கின்றன. உயிரினங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் அன்றாடச் செயல்பாட்டிற்கும் உணவு அவசியமாகிறது. விலங்குகள் தமக்குத் தேவையான உணவைத் தேடி உண்பதைக் காண்கிறோம். ஆனால் தாவரங்கள் தங்கள் உணவை எவ்வாறு பெறுகின்றன என்பதனை நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? இலைகளில் இருக்கும் **பச்சையம் (குளோரோபில்)** நிறமியின் உதவியுடன் தாவரங்கள் தம் உணவைத் தாமே உற்பத்தி செய்கின்றன. மனிதர்களும் விலங்குகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உணவுக்காகத் தாவரங்களைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. இத்தகைய தாவரங்களைப் பற்றி இப்பாடத்தில் மேலும் அறிந்து கொள்வோம்.

## I. இலையின் பாகங்கள்

இலைகள் வேறுபட்ட வடிவம் மற்றும் அளவுகளையும், பல்வேறு பாகங்களையும் கொண்டுள்ளன. எனினும், பெரும்பாலான இலைகள் பொதுவான சில அடிப்படையான பாகங்களைப் பெற்றுள்ளன.

**இலைத்தாள்** : இது இலையின் பரந்த தட்டையான பகுதியாகும் (லாமினா).

**இலை நுனி** : இது இலையின் முனைப் பகுதியாகும்.

**மைய நரம்பு** : இலையின் நடுவில் மைய நரம்பு செல்கிறது.

**நரம்புகள்** : இலை நரம்புகள் மைய நரம்பிலிருந்து கிளைகளாகப் பிரிகின்றன. அவை நீர் மற்றும் தாதுக்களைக் கொண்டு செல்லும் வெற்றுக்குழாய்கள் ஆகும்.




**இலைக்காம்பு** : இலைக்காம்பானது இலையை முதன்மைத் தண்டுப் பகுதியுடன் இணைக்கிறது.



4th_Science_Unit 3_Plants.indd 77 21-08-2019 17:51:43